


**13. 10. 2025**

## தலைப்பு செய்திகள்

- ரயில்வே பாதுகாப்பு படை தேர்வு, பணியாளர் தேர்வாணையம் மூலம் ஆண்டுதோறும் இனி நடத்தப்படும் என்று ரயில்வே அமைச்சர் திரு.அஷ்விணி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.
- பீஹார் மாநிலத்தில் 122 சட்டப்பேரவை தொகுதிகளுக்கு அடுத்த மாதம் 11ஆம் தேதி நடைபெறும் இரண்டாம் கட்ட வாக்குப்பதிவிற்கான வேட்பு மனு தாக்கல் இன்று தொடங்கியது.
- சென்னை, மதுரை, தேனி, திருவண்ணாமலை, வேலூர் உள்ளிட்ட மாவட்டங்களில் 361 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு வளர்ச்சி திட்டங்களை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் இன்று தொடங்கிவைத்தார்.
- தமிழக சட்டப்பேரவை கூட்டத்தொடர் நாளை தொடங்குகிறது.
- புதுதில்லியில் இந்தியாவிற்கு எதிரான 2ஆவது இறுதி டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் வெஸ்ட் இண்டிஸ் நிதானமாக விளையாடுகிறது.

## இனி விரிவான செய்திகள்

*************

**அஷ்விணி வைஷ்ணவ்**

ரயில்வே பாதுகாப்பு படையினரின் தேர்வு, பணியாளர் தேர்வாணையம் மூலம் ஆண்டுதோறும் இனி நடத்தப்படும் என்று மத்திய ரயில்வே அமைச்சர் திரு.அஷ்விணி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

ரயில்வே பாதுகாப்பு படையின் 41ஆவது நிறுவன நாளை ஒட்டி, குஜராத் வல்ஸாத்தில் இன்று உரையாற்றிய அமைச்சர், இப்படை பிரிவினருக்கு விரைவில் ட்ரோன் உள்ளிட்ட அதிநவீன தொழில்நுட்ப பயிற்சிகள் வழங்கப்பட்டு செயல்திறன் மேம்படுத்தப்படும் என்றார்.

குறைந்த வருவாய் பிரிவினரின் நலனுக்காக ரயில்வே அமைச்சகத்தின் செயல்பாட்டை எடுத்துரைத்த அமைச்சர் வரும் தீபாவளி உள்ளிட்ட பண்டிகைகளை ஒட்டி 12 ஆயிரம் சிறப்பு ரயில்கள் இயக்கப்படும் என்றார்.

கடந்த 11 ஆண்டுகளில் 35 ஆயிரம் கிலோ மீட்டர் நீள ரயில்வே பாதைகள் கட்டமைக்கப்பட்டு 99 சதவிகிதம் மின்மயமாக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

7 ஆயிரத்து 300 ரயில் நிலையங்கள் மறுசீரமைப்பு திட்டம் விரைந்து மேற்கொள்ளப்படுவதாகவும்,

110 நிலையங்களின் மேம்பாட்டு பணிகள் முடிவடைந்துள்ளதாகவும் கூறினார்.

இந்நிகழ்வில் ரயில்வே பாதுகாப்பு படையினரின் அணிவகுப்பை ஏற்றுக்கொண்ட அமைச்சர் சிறப்பாக செயலாற்றிய 40 ஊழியர்களுக்கு விருதுகளை அமைச்சர் வழங்கினார்.

*************

**தர்மேந்திர பிரதான்**

வளர்ச்சி அடைந்த பாரதமாக நம்நாடு உருவெடுக்க உற்பத்தியுடன் கூடிய பொருளாதார பாதையின் அவசியத்தை மத்திய கல்வி அமைச்சர் திரு.தர்மேந்திர பிரதான் வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் வளர்ச்சி அடைந்த பாரதம் "பில்டத்தான்" 2025-ஐ இன்று துவக்கிவைத்து பேசிய அவர், 21-ஆவது நூற்றாண்டு அறிவுசார் நூற்றாண்டாக திகழும் என்றார்.

இதன்மூலம், உலகளாவிய அறிவுத்திறன் மற்றும் பொருளாதார கட்டமைப்பில் முன்னோடி நாடாக இந்தியா உயரும் என்றார்.

வளர்ச்சி அடைந்த தேசமாக நாம் உருவாக தெளிவான தொலைநோக்கு பார்வை, அதிநவீன தொழில்நுட்பங்கள், தகவல் தொழில்நுட்ப தீர்வுகள் தேவை என்று குறிப்பிட்டார்.

நம் நாட்டின் இளையோர் வரும் ஆண்டுகளில் இவற்றை முன்னெடுத்து சென்று புதிய பாரதத்தை படைப்பார்கள் என்று நம்பிக்கை வெளியிட்டார்.

இந்நிகழ்வில் 3 லட்சம் பள்ளிகளை சேர்ந்த 25 லட்சத்திற்கும் அதிகமான மாணாக்கரும் ஆசிரியர்களும் இணையவழியில் பங்கேற்றுள்ளனர்.

அட்டல் படைப்பாற்றல் இயக்கம், நித்தி ஆயோக் ஆகியவை இணைந்து ஏற்பாடு செய்திருந்த இந்நிகழ்வில் 6 முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் மாணாக்கர் ஆளுமை பெறும் வகையில் தங்கள் திறன்களை வெளிப்படுத்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

கலாச்சார படைப்பாற்றல் திறன்மூலம் சுயசார்பு பாரதம், உள்ளூர் பொருட்களுக்கு முக்கியத்துவம், மின்னணு தகவல் தொழில்நுட்ப தீர்வுகள் போன்றவற்றில் பள்ளி மாணாக்கர் பங்கேற்று செயலாற்ற இத்தளம் வழிகோலுகிறது.

*************

**பியூஷ்கோயல்**

பிரதமரின் கதி சக்தி திட்டம் நாட்டின் உள்கட்டமைப்பை முழுமையாக மாற்றியமைத்துள்ளதாக மத்திய வர்த்தக தொழில்துறை அமைச்சர் திரு.பியூஷ்கோயல் தெரிவித்துள்ளார்.

இந்த திட்டத்தை பிரதமர் திரு.நரேந்திரமோடி துவக்கிவைத்து நான்காண்டுகள் நிறைவை ஒட்டி அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதள பதிவில் நாட்டின் உள்கட்டமைப்பு பிரிவை சர்வதேச தரத்திற்கு முன்னெடுத்து சென்றுள்ளதாக கூறினார்.

இதன்மூலம் அமைச்சகங்கள், மாநிலங்கள், யூனியன் பிரதேசங்கள், பல்வேறு பிரிவுகளை டிஜிட்டல் தளத்தில் ஒருங்கிணைத்ததன் மூலம் கட்டமைப்பு பணிகள் துரிதமாக முன்னெடுத்து செல்லப்படுவதாக அவர் எடுத்துரைத்தார்.

வளர்ச்சி அடைந்த பாரத பாதையில் கதி சக்தி திட்டம் இணைப்புகள் மற்றும் மேம்பட்ட தளவாட போக்குவரத்தை முன்னெடுத்து செல்லும் இன்றியமையா கருவியாக திகழ்வதாக குறிப்பிட்டார்.

*************

**பீஹார்**

பீஹார் மாநிலத்தில் 20 மாவட்டங்களின் 122 சட்டப்பேரவை தொகுதிகளுக்கு அடுத்த மாதம் 11ஆம் தேதி நடைபெறும் இரண்டாம் கட்ட வாக்குப்பதிவிற்கான வேட்பு மனு தாக்கல் இன்று தொடங்கியது.

வேட்பு மனுக்களை தாக்கல் செய்ய வரும் 20ஆம் தேதிவரை கால அவகாசம் உள்ள நிலையில் வரும் 21ஆம் தேதி அவை பரிசீலிக்கப்படுகின்றன.

மனுக்களை விலக்கிகொள்ள வரும் 23ஆம் தேதி கடைசி நாளாகும்.

அடுத்த மாதம் 6ஆம் தேதி நடைபெற உள்ள முதற்கட்ட தேர்தலுக்கான வேட்பு மனு தாக்கல் வரும் வெள்ளிக்கிழமையுடன் முடிவடைகிறது.

இரண்டு கட்ட தேர்தலில் பதிவாகும் வாக்குகள் அடுத்த மாதம் 14 ஆம் தேதி எண்ணப்படுகின்றன.

*************

**இஸ்ரேல்**

காசா அமைதி ஒப்பந்தத்தை செயல்படுத்துவதற்காக இன்று நடைபெறும் காசா அமைதி உச்சிமாநாட்டில் பங்கேற்பதற்காக மத்திய வெளியுறவுத்துறை இணை அமைச்சர் திரு.கீர்த்தி வர்தன் சிங் எகிப்து நாட்டின் **ஷர்ம் அல் ஷேக்** சென்றடைந்தார்.

இஸ்ரேல் - ஹமாஸ் இடையே ஏற்பட்ட அமைதி உடன்பாடு மத்திய கிழக்கு பகுதிகளில் அமைதி திரும்ப வழிகோலும் என்று வெளியுறவு துறையின் முன்னாள் செயலர் திரு.ஆர்.சுவாமி நாதன் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

**வாய்ஸ்**

*************

**முதலமைச்சர்**

முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் சென்னை, மதுரை, தேனி, திருவண்ணாமலை, வேலூர் ஆகிய மாவட்டங்களில் 361 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு வளர்ச்சி திட்டங்களை இன்று தொடங்கிவைத்தார்.

சென்னை தலைமை செயலகத்தில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் மதுரை சட்டக்கல்லூரியில் 40 கோடி ரூபாய் மதிப்பிலான கட்டிடம்,

வேலூர் சட்டக்கல்லூரியில் 6 கோடி ரூபாய் மதிப்பிலான நூலக கட்டிடம், உள்ளிட்டவைகளை திறந்து வைத்தார்.

இந்து சமய அறநிலையத்துறை சார்பில் 43 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 4 திருக்கோவில்களில் முடிவுற்ற திட்ட பணிகளை தொடங்கிவைத்த முதலமைச்சர் ஸ்ரீரங்கம் அரங்கநாதசுவாமி திருக்கோவில் கோ சாலையையும் திறந்துவைத்தார்.

தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தக துறையின் சார்பில் தொழில் பூங்காக்களில் அமைந்துள்ள 16 புதிய குழந்தைகள் காப்பகங்கள்,

திண்டிவனம் மற்றும் தேனியில் மாபெரும் உணவு பூங்கா,

சமூக நலத்துறை சார்பில் திருநங்கைகளுக்காக செனாய் நகர் மற்றும் மதுரையில் அமைக்கப்பட்டுள்ள அரண் இல்லம் உள்ளிட்டவற்றையும் முதலமைச்சர் திறந்துவைத்தார்.

முன்னதாக தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட 88 பேருக்கு பணிநியமன ஆணைகளையும் முதலமைச்சர் வழங்கினார்.

*************

**சட்டப்பேரவை கூட்டத்தொடர்**

தமிழக சட்டப்பேரவை கூட்டத்தொடர் நாளை தொடங்குகிறது.

வரும் வெள்ளிக்கிழமை வரை நான்கு நாட்கள் இக்கூட்டத்தொடர் நடைபெறும் என்று திரு.அப்பாவு தெரிவித்துள்ளார்.

அலுவல் ஆய்வுக்குழு கூட்டத்திற்கு பின்னர் இம்முடிவு எட்டப்பட்டதாக கூறிய அவர், நாளைகாலை மறைந்த உறுப்பினர்களுக்கு அவையில் இரங்கல் தெரிவிக்கப்படும் என்றும்

வரும் 15ஆம் தேதி கூடுதல் மானிய கோரிக்கை அவையில் சமர்ப்பிக்கப்படும் என்றும் கூறினார்.

*************

**கரூர்**

கரூர் கூட்ட நெரிசல் சம்பவத்தை சிபிஐ விசாரிக்க உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பாக சிறப்பு புலனாய்வு விசாரணைக்கு சென்னை உயர்நீதிமன்றம் பிறப்பித்த ஆணையை எதிர்த்து, த.வெ.க உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவை விசாரித்த நீதிபதிகள், ஜே.கே.மகேஸ்வரி, என்.வி.அஞ்சாரியா ஆகியோர் கொண்ட அமர்வு இதற்கான உத்தரவை பிறப்பித்தது.

முன்னாள் உச்சநீதிமன்ற நீதிபதி அஜய் ரஸ்தோகி தலைமையில் 3 உறுப்பினர் விசாரணை குழுவை நியமனம் செய்த உச்சநீதிமன்றம் தமிழ்நாட்டில் பணிபுரியும் காவல்துறை தலைவர் பதவிக்கு குறையாத 2 வெளிமாநில ஐ.பி.எஸ்.அதிகாரிகள் இதில் இடம்பெற அறிவுறுத்தியது.

இவ்விரு ஐ.பி.எஸ் அதிகாரிகளை நீதிபதி ரஸ்தோகி தேர்ந்தெடுக்கவும் உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

*************

**மருந்து உற்பத்தி**

தமிழ்நாட்டில் அமைந்துள்ள இதர மருந்து உற்பத்தி நிறுவனங்கள் மீது விரிவான ஆய்வு மேற்கொள்ள ஆணைகள் வழங்கப்பட்டுள்ளதாக மாநில அரசு அறிவித்துள்ளது.

மத்திய பிரதேசத்தில் இருமல் மருந்து உட்கொண்ட குழந்தைகள் உயிரிழந்த சம்பவத்தை தொடர்ந்து மருந்து உற்பத்தி நிறுவனத்தின் உரிமங்கள் இன்று முழுமையாக ரத்து செய்யப்பட்டது.

அந்நிறுவனத்தின் உரிமையாளர் ஏற்கனவே கைது செய்யப்பட்டார்.

இதனிடையே கடந்த ஆண்டில் உரிய ஆய்வை மேற்கொள்ளாத காஞ்சிபுரம் முதுநிலை மருந்துகள் ஆய்வாளர் இருவர் பணியிடை நீக்கம் செய்யப்பட்டனர்.

இந்நிலையில் இந்த உத்தரவை மாநில அரசு பிறப்பித்தது.

*************

**சிவகங்கை – மனோ தங்கராஜ்**

ஊரக பொருளாதாரத்தை மேம்படுத்த பால்வளத்துறை சிறப்பாக செயல்படுவதாக மாநில பால்வளத்துறை அமைச்சர் திரு.மனோ தங்கராஜ் தெரிவித்துள்ளார்.

காரைக்குடி ஒன்றியத்தின் சார்பில் 13 ஆயிரத்து 126 பால் உற்பத்தியாளர்களுக்கு 8 கோடியே 96 லட்ச ரூபாய் மானியக்தொகையை அமைச்சர் திரு.பெரியகருப்பனுடன் இணைந்து அவர் இன்று வழங்கினார்.

ஆவின்பால் தரமான பொருட்கள் குறைந்த விலையில் மக்களுக்கு வழங்குவதாக அவர் குறிப்பிட்டார்.

இத்திட்டத்தின் மூலம் ஒரு லட்சம் ரூபாய் ஊக்கத்தொகை பெற்ற பயனாளி இத்திட்டம் தனக்கு பயனளிப்பதாக கூறினார்.

**வாய்ஸ்**

*************

**தர்மபுரி**

தர்மபுரி வேலை வாய்ப்பு மற்றும் தொழில் நெறி வழிகாட்டு மையம் சார்பில் அரசு கலை கல்லூரியில் இன்று கருத்தரங்கம் நடைபெற்றது,

இதில் கையேடுகளை வெளியிட்டு பேசிய ஆட்சித்தலைவர் மாணவர்கள் தன்னம்பிக்கையோடு செயலாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

**வாய்ஸ்**

*************

**கிரிக்கெட்**

புதுதில்லியில் இந்தியாவிற்கு எதிரான 2-வது இறுதி டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் நான்காம் நாளான இன்று வெஸ்ட்இண்டிஸ், தனது 2-வது இன்னிங்ஸில் சற்றுமுன் 9 விக்கெட் இழப்பிற்கு 311 ரன் எடுத்திருந்தது.

முதல் இன்னிங்ஸ் ஸ்கோர் :

இந்தியா 5 விக்கெட் இழப்பிற்கு 518 declared.

வெஸ்ட்இண்டிஸ் 248.

************

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது**